# உண்மையான வளர்ச்சிக்கு ஒரு புதிய விளக்கம்: புதிய நாளைய தினத்திற்கான தேசிய மக்கள் சக்தியின் நோக்கு!

NPP ஐ சேர்ந்த , நாங்கள் மாற்றம் ஒன்றை நாடுபவர்கள் மட்டும் அல்லர், மாறாக, நாங்கள் மீள்வரையறை செய்துள்ள மிகவும் நியாயமான மற்றும் வளமான நாளைய தினத்தை நோக்கி நகர்கின்ற ஓர் அரசியல் அமைப்பாகும். எமது நோக்கம் பொருளாதார வளர்ச்சி, சமூக நல்வாழ்வு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றுடன் கைகோர்த்துச் செல்லும் வளமானதோர் எதிர்காலம் ஆகும். நாங்கள் தனிநபர்களை வலுப்படுத்துகிறோம், சமூகங்களை பலப்படுத்துகிறோம் அத்துடன் புதுமைகளைப் படைக்கிறோம். கல்வி மற்றும் நிலையான நடைமுறைகளுக்கான எமது அர்ப்பணிப்பானது, அனைத்து தலைமுறையினருக்கும் ஒரு வளமான நாளைய தினத்தை உறுதிப்படுத்துகிறது. எவரையும் கைவிடாது எதிர்காலத்தை மீளவும் வடிவமைக்கும் இந்தப் பயணத்தில் எம்முடன் ஒன்றிணையுங்கள், இணைந்து நாம் வெற்றிக்கான புதிய தரநியமங்களை தயார் செய்வோம்.

